www.Padasalai.Net

தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர் மற்றும்
பள்ளிக் கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள். சென்னை - 600 006

ந.க.எண்: 1587/ C7 / OoSC / SS/2024/ நாள்: 23.04.2024

பொருள்: 2023-24 ஆம் கல்வியாண்டு - ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - OoSC - "தொடர்ந்து கற்போம்" என்ற முன்னோடி திட்டம் - அனைத்து மாவட்டங்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் மார்ச் 2024 - ல்10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்விற்கு வருகை புரியாத மாணவர்கள் மற்றும் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி நடத்துதல் மற்றும் துணைத் தேர்வில் பங்கேற்க செய்தல் - வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் - சார்பு

பார்வை: திட்ட ஏற்பளிப்புக்குழுக் கூட்ட குறிப்பு: F.No:09-1/2024-IS6,3.1.1 Innovation Projects-, dated: 12.04.2024

*****

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ், 6-18 வயதுடைய பள்ளி செல்லா / இடைநின்ற குழந்தைகள் (மாற்றுத் திறனுடைய குழந்தைகள் மற்றும் இடம் பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகள் உட்பட) மற்றும் இடைநிற்றலுக்கு வாய்ப்புள்ள குழந்தைகளை (Potential Dropout) கண்டறிந்து மீள பள்ளிக்கு வரவழைப்பதற்கான செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பள்ளியில் சேர்க்கப்படாத அல்லது பள்ளிக்கு வருகை புரியாத குழந்தைகள், பள்ளிக்கு வெளியே இருக்கும் குழந்தைகளாகக் கருதப்படுகின்றனர். அத்தகைய குழந்தைகளை அடையாளம் கண்டு தரமான கல்வியை வழங்குவது இடைநிற்றலுக்கான முக்கிய அளவுகோல் ஆகும்.

அதே போன்று, மார்ச் 2024ஆம் ஆண்டு பொது தேர்வில் தேர்ச்சி பெறாத மற்றும் பொதுத் தேர்விற்கு வருகை புரியாத 10 ஆம் வகுப்புமாணவர்கள்மற்றும் பள்ளிக்கல்வியினை பாதியில் கைவிடும் மாணவர்கள் இனம் கண்டு அவர்களுக்கு தேவையான உதவிகளையும் சிறப்புப் பயிற்சிகளையும் வழங்கி தொடர்ந்து பள்ளிக்கல்வியினை தொடர செய்வதும் OoSCயின் திட்டக்கூறுகளில் ஒன்றாகும். இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த

www.Padasalai.Net

பள்ளிக்கல்வி "தொடர்ந்து கற்போம்" என்ற ஒரு முன்னோடி திட்டத்தினை வடிவமைத்து அதனை அரசுப் பள்ளிகளில் செயல்படுத்த திட்ட ஏற்பளிப்புக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதன்படி,"தொடர்ந்து கற்போம்" என்ற முன்னோடி திட்டமானது கடந்த மார்ச் 2023- ல் அரசு பொதுத் தேர்வில் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு 45,000 மாணவர்கள் பயனடைந்தனர். கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு "தொடர்ந்து கற்போம்" திட்டம் இன்னும் சிறப்பாக நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனை தொடர்ந்து, மார்ச் 2024 ஆம் ஆண்டின் 10 ஆம் வகுப்பு பொது தேர்வில் தேர்ச்சி பெறாத மற்றும் தேர்வில் வருகை புரியாத மாணவர்கள் அனைவருக்கும் உரிய குறைந்த பட்ச கற்றல் கையேடு (MLM) மற்றும் வினாத்தாள் விநியோகித்து அவர்களின் வருகை மற்றும் வாராந்திர தேர்வு மதிப்பீட்டு முன்னேற்ற அறிக்கையை கல்வி மேலாண்மை தகவல் மையம் (EMIS) மூலம் பெற்று முறையாக கண்காணிக்கப்பட வேண்டியது அவசியம் என்று உணர்ந்து சில முக்கிய செயல்பாடுகளுக்கான முன் திட்டமிடல் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் மாவட்டங்களில் பள்ளி அளவில் 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத மற்றும் தேர்விற்கு வருகை புரியாத மாணவர்களுக்கு அந்தந்த உயர்நிலை / மேல்நிலை பள்ளி பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு **இத்திட்டம், தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாள் முதல் துணை தேர்வு நடைபெறும் நாள் வரை சிறப்பு பயிற்சி வகுப்புகள் மற்றும் வாராந்திர தேர்வுகள் நடத்திட** திட்டமிடப்பட்டுள்ளது.

இச்செயல்பாட்டின் முக்கிய நோக்கம்:

பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாத மற்றும் தேர்விற்கு வருகை புரியாத மாணவர்களைக் கண்டறிந்து அவர்களைத் துணைத்தேர்விற்கு விண்ணப்பிக்கச் செய்வது, தொடர்ந்து பயிற்சி வகுப்புகளில் மாணவர்களை பங்குபெறச்செய்வது மற்றும் விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் பொதுத்தேர்வு எழுதி மேற்கொண்டு கல்வியினை தொடரச் செய்வதை உறுதி செய்தலுமாகும்.

www.Padasalai.Net

## திட்டத்தின் செயல்பாட்டிற்கான நிலையான வழிக்காட்டு நெறிமுறைகள் (SOP)

## கடமைகள் மற்றும் பொறுப்புகள்

### (I) ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

#### (அ) மாநில திட்ட இயக்ககம்

1. "**தொடர்ந்து கற்போம்**" என்ற திட்டம் மாநில திட்ட இயக்குநர் அவர்களின் நேரடி கண்காணிப்பில் நடைபெறும்.
2. பாட வாரியான ஆசிரியர்கள் குழு மூலம் குறைந்த பட்ச கற்றல் கையேடு (MLM) மற்றும் வினாத்தாள் தயாரித்தல்.
3. ஆசிரியர்கள் குழு மூலம் தயாரிக்கப்பட்ட குறைந்தபட்ச கற்றல் கையேட்டினை (Soft Copy) அனைத்து மாவட்டங்களுக்கு அனுப்புதல் மற்றும் நகல் எடுப்பதற்கான நிதி வழங்குதல் .
4. மாணவர்களின் வருகை மற்றும் வாராந்திர தேர்வு மதிப்பெண் ஆகியவற்றை உள்ளீடு செய்து தொடர் அறிக்கைகளை பெறுவதற்கு ஏதுவாக உரிய கல்வி மேலாண்மை தகவல் மையத்தில் (EMIS) மின் கட்டகம் (Module) உருவாக்கி கண்காணித்தல்.
5. "தொடர்ந்து கற்போம்" திட்டத்தை மாணவர்களுக்கும் மற்றும் பெற்றோர்களுக்கும் சமூக ஊடகங்கள் மற்றும் செய்தித்தாள் வழியாக விழிப்புணர்வு வழங்குதல்.
6. திட்டத்தின் அனைத்து செயல்பாடுகளையும் கண்காணித்தல்.

#### (ஆ) மாநில EMIS ஒருங்கிணைப்பாளரின் / EMIS குழு பணிகள்

1. தேர்வு எழுதாத மற்றும் தேர்ச்சி பெறாத மாணவர்கள் பற்றிய விவரங்களை பள்ளி வாரியாகவும், மாவட்ட வாரியாகவும், மாணவர்களின் விவரங்களை உரிய கல்வி மேலாண்மை தகவல் மையம் (EMIS)தளத்தில் பதிவிடுதல்
2. "**தொடர்ந்து கற்போம்**" திட்டத்தில் கலந்து கொண்டு பயிற்சி பெறுவதற்கான **மாணவர் வருகையினை குறிப்பதற்கும்** வாரந்தோறும் நடைபெறும் சிறு **தேர்வு மதிப்பெண்ணை பதிவு செய்வதற்குமான** பதிவினை மேற்கொள்ள மின் கட்டகம்(Module) மேம்படுத்தல்.
3. வாரந்தோறும் மாணவர்களின் வருகையினை (**ஒவ்வொரு மாணவருக்கும்**) தெரிந்து கொள்வதற்கான வார சுருக்கறிக்கை (Weekly wise Abstract) மின்கட்டகத்தில்(Module) சேர்க்கப்பட வேண்டும்.

www.Padasalai.Net

4. அனைத்து நிலைகளிலும் கல்வி தகவல் மேலாண்மை (EMIS) தொகுப்பில் இப்பணிகளை கண்காணிப்பதற்கும் மாநில / மாவட்ட அளவில் ஆய்வு செய்வதற்கும் ஏதுவாக தரவுகளை உள்ளீடு செய்து தொகுப்பறிக்கை பெறுவதற்கு உரிய வசதிகளை ஏற்படுத்தி தருதல்.

( II ) **பள்ளிக்கல்வி இயக்ககம்** :

1. "**தொடர்ந்து கற்போம்**" என்ற திட்டம் 10 - ஆம் வகுப்பு அரசு பொது தேர்வில் தேர்ச்சி பெறாத மற்றும் தேர்விற்கு வருகை புரியாத மாணவர்களுக்கு மட்டுமே. அவர்கள் பயின்ற பள்ளியிலேயே மையம் அமைத்து **அரசு பொது தேர்வு முடிவு வந்த மறுநாள் முதல்** 10 **ஆம் வகுப்பு துணை தேர்வு வரை மட்டுமே செயல்படுத்தப்படும் குறைந்த கால அளவு** திட்டமாகும். எனவே சிறப்பான முன்திட்டமிடல் அவசியம்.
2. **மார்ச் 2024 -ல் 10 ஆம்** வகுப்பு அரசு பொது தேர்வில் தேர்ச்சி பெறாத மற்றும் தேர்விற்கு வருகை புரியாத மாணவர்களின் விவரங்களை **அரசுத் தேர்வுகள் இயக்ககம் மூலமாக பெற்று கல்வி மேலாண்மை தகவல் மையத்திற்கு ( EMIS) உடனடியாக வழங்குதல்** .
3. முதன்மை கல்வி அலுவலர் மூலமாக குறைந்த பட்ச கற்றல் கையேடு (MLM) மற்றும் வினாத்தாள் நகல் எடுத்து (HardCopy ) அனைத்து "**தொடர்ந்து கற்போம்**" மைய பள்ளி தலைமையாசிரியர்களுக்கு சென்றடைதலை உறுதி செய்தல்.
4. மாவட்ட மற்றும் வட்டார அளவில் கண்காணிப்பு குழு அமைத்து மைய செயல்பாடுகளின் மதிப்பீடுகளை கண்காணித்தல் மற்றும் வழிகாட்டுதல்.
5. "தொடர்ந்து கற்போம்" திட்டத்தை பற்றி மாணவர்களுக்கும், சமுக ஊடகங்கள் மற்றும் செய்தித்தாள் வழியாக விழிப்புணர்வு வழங்க வேண்டும்.

(III) மாவட்டத்திட்ட அலுவலகம் :

**முதன்மைக்கல்வி அலுவலர் மற்றும் உதவி திட்ட அலுவலர் - பணிகள்**

1. "தொடர்ந்து கற்போம்" திட்டம் **அரசு பொது தேர்வு முடிவு வந்த மறுநாள் முதல் 10 ஆம் வகுப்பு துணை தேர்வு வரை** மிக சிறப்பாக நடைபெற மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் பணி மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
2. மாவட்டக்கல்வி அலுவலர் மற்றும் உதவி திட்ட அலுவலர் தலைமையில் வட்டார அளவில் ஒவ்வொரு பள்ளி தலைமையாசிரியர்களுக்கும், வகுப்பாசிரியர்களுக்கும் உரிய ஆலோசனை கூட்டம் நடத்தி தகவல் தெரிவிக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டும்.
3. மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாரங்களுக்கும் ஒவ்வொரு வட்டாரத்திற்கு தனித்தனியாக பள்ளிகளை ஆய்வு செய்வதற்கு வட்டார வாரியான குழு நியமிக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டும் .

www.Padasalai.Net

4. வட்டாரம் வாரியாக ஆய்வு செய்யும் குழுவில் மாவட்டக்கல்வி அலுவலர்கள், உதவித்திட்ட அலுவலர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள் ஆகியோரைக் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும்.
5. **மாநில திட்ட அலுவலகத்தில் தயாரித்த குறைந்த பட்ச கற்றல் கையேடு (MLM) மற்றும் வினாத்தாள்கள் மாவட்ட அலுவலகத்திற்கு (SOFT Copy) ஆக அனுப்பப்பட்ட கற்றல் விவர குறிப்புகளை மாணவர்களின் எண்ணிக்கைக்கு தகுந்தவாறு, மாவட்டக்கல்வி அலுவலர் இடைநிலை, உதவி திட்ட அலுவலர் மற்றும் முதன்மைக்கல்வி அலுவலக தேர்வு பிரிவு பணியாளர்கள் உதவியுடன் உரிய கொள்முதல் விதிகளை பின்பற்றி தேவைக்கேற்ப 80 GSM காகிதத்தில் நகல் எடுத்து (Hard Copy) பள்ளிகளுக்கு வழங்க வேண்டும்.**
6. மாணவர்களுக்குரிய குறைந்த பட்ச கற்றல் கையேடு (MLM) மற்றும் வினாத்தாள் அந்தந்த மாவட்டங்களின் பெயர்கள் முகப்பு பக்கத்தில் அச்சடித்து அனைத்து பள்ளிகளுக்கும் அனுப்பிவைத்து மாணவர்களுக்கு சென்றடைவதை உறுதி செய்யவேண்டும்.
7. இதற்குரிய செலவினைத்தொகை மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் மூலம் மாவட்டத்திற்கு நிதி விடுவிக்கப்படும்.
8. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மாவட்ட அளவிலான ஒரு அலுவலரை மாவட்டக்கல்வி அலுவலர்கள் (தொடக்கநிலை/ இடைநிலை/ தனியார் பள்ளிகள்), அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / பள்ளி துணை ஆய்வாளர்கள் பொறுப்பாளராக நியமிக்க வேண்டும்..
9. சனிக்கிழமைகளில் தேர்வு நடைபெறுவதை உறுதிபடுத்துதல் மற்றும் தன்னம்பிகையூட்டம் ஊக்கவுரைக்கு கல்வி தன்னார்வலர்களை நியமிக்க வேண்டும்.
10. அனைத்து உட்கூறு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கும், ஒரு வட்டாரம் பொறுப்பாக ஒதுக்கீடு செய்யவேண்டும். மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வட்டாரத்தில் உள்ள பள்ளிகளுக்கு நேரடியாக சென்று, மாணவர்கள் பயிற்சிக்கு அழைத்து வருவதற்கான முயற்சிகள் மற்றும் மாணவர்களுக்கு தேவையான கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளை கண்டறிந்து தேவைகளை உதவிடவேண்டும்.
11. "**தொடர்ந்து கற்போம்**"திட்டத்தை மாணவர்களுக்கும் மற்றும் பெற்றோர்களுக்கும் பள்ளி மேலாண்மைக்குழு, இல்லம்தேடிக்கல்வி தன்னார்வலர்கள்,வாசிப்பு இயக்க கருத்தாளர்கள் மற்றும் உள்ளூர் சமூக ஊடகங்கள், செய்தித்தாள் வழியாக விழிப்புணர்வு வழங்கி கண்காணிக்க வேண்டும்.

www.Padasalai.Net

(அ) மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை)

1. ஆய்வு அலுவலர்கள் வாரத்தில் இரண்டு நாட்கள் பயிற்சி மையத்தினை பார்வையிட்டு செயல்பாடுகள் நடைபெறுவதை உறுதி செய்வதற்கு அவர்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கி. வாராந்திர தேர்வுகள் நடைபெறுவதை பார்வையிட வேண்டும்.
2. இத்திட்டத்தின் அனைத்து நிகழ்வுகளையும் மாவட்டக்கல்வி அலுவலர்கள் கண்காணித்து, உதவி திட்ட அலுவலர் உதவியோடு ஆவணப்படுத்தல் வேண்டும்.

<u>(ஆ) மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களின் (OoSC) பணிகள்:</u>

1. மாநில அளவில் தயாரிக்கப்பட்ட குறைந்த பட்ச கற்றல் கையேடுகளை மாணவர்களின் எண்ணிக்கைக்கு தகுந்தவாறு மாவட்ட அளவில் தயார் செய்து, வட்டார மேற்பார்வையாளர்கள் மூலம் அனைத்து பள்ளிகளுக்கும் சென்றடைந்ததை மாவட்ட OoSC ஒருங்கிணைப்பாளர் மூலம் உறுதி செய்ய வேண்டும்.
2. சிறப்பு பயிற்சிக்கு வருகை புரியும் மாணவர்களுக்கு கல்வி தகவல் மேலாண்மை தளத்தில் மாணவர்கள் வருகை பதிவு தினமும் மேற்கொள்ளப்படுவதையும், வாரந்தோறும் நடைபெறும் சிறு தேர்வு மதிப்பெண்களை Update செய்யும் பணியினையும் மாவட்ட EMIS ஒருங்கிணைப்பாளர் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
3. மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள் பெறப்பட்டவுடன் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகளாக அனைத்து அரசு உயர்நிலை/மேல்நிலை பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.
4. "தொடர்ந்து கற்போம்" சிறப்பு பயிற்சி மையம் முடிந்தவுடன் அனைத்து நிகழ்வுகளையும் தொகுத்து "ஆவண தொகுப்பு" உருவாக்கி மாநில திட்ட இயக்ககத்திற்கு (Soft& HardCopy) அனுப்புதல் வேண்டும்.

(இ) பள்ளி மேலாண்மைக்குழு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பணிகள்:

1. பள்ளி மேலாண்மைக்குழு கூட்டம் நடத்துதல் வேண்டும்.
2. பொது தேர்வில் தேர்ச்சி பெறாத மற்றும் தேர்விற்கு வருகை புரியாத மாணவர்களின் விவரங்களை பள்ளி தலைமையாசிரியரிடம் பெற்று பள்ளி மேலாண்மைகுழுவிடம் வழங்கி, ஒவ்வொரு உறுப்பினருக்கும் இரண்டு மாணவர்கள் என்று பிரித்து கொடுத்து மாணவர்களின் வீட்டிற்கே சென்று மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும்

www.Padasalai.Net

விழிப்புணர்வு வழங்கி, மாணவர்களை சிறப்பு பயிற்சி மையத்திற்கு வருகை புரிய செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**( ஈ ) வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர் பணிகள்:**

1. சம்மந்தப்பட்ட பள்ளி ஆசிரியர் பயிற்றுநர்கள் தேர்விற்கு வருகை புரியாத தேர்ச்சி பெறாத மாணவர்களை பள்ளி தலைமையாசிரியர், மேலாண்மைக்குழு உறுப்பினர்கள், வகுப்பு ஆசிரியர்கள் மூலம் மாணவர்களின் வீட்டிற்கு நேரடியாக சென்று சிறப்பு பயிற்சி வகுப்பிற்கு வருவதற்கு விழிப்புணர்வு வழங்க பள்ளிகளுக்கு உதவி செய்தல் வேண்டும்.
2. மாவட்ட அலுவலகத்திலிருந்து மாணவர்களுக்கு வழங்கக்கூடிய குறைந்த பட்ச கற்றல் கையேடு (MLM) மற்றும் வினாத்தாள் மாணவர்களுக்கு சென்றடைந்ததை உறுதி செய்ய வேண்டும்.
3. பயிற்சி நடைபெறும் நாட்களில் சம்மந்தப்பட்ட பள்ளிக்கு ஒரு பார்வையாளராக சென்று பள்ளியில் நடக்கும் சிறப்பு பயிற்சி வகுப்புகளை பார்வையிடுதல் வேண்டும்.
4. இம்மாணவர்களுக்கு வாராந்திர தேர்வுகளை ( நான்கு வாரங்கள் ) பாட ஆசிரியர்களைக் கொண்டு நடத்துவதையும், மதிப்பெண் விவரங்களையும் தலைமைசிரியர்களிடமிருந்து பெற்று கல்வி மேலாண்மை தகவல் மையத்தில் (EMIS) பதிவு செய்வதை உறுதி செய்யவேண்டும்.
5. மேற்கண்ட செயல்பாடுகள் அனைத்தும் மாநில அளவில் நடைபெறும் வாராந்திர கூட்டத்தில் மேற்பார்வை செய்யப்பட்ட அறிக்கைகள் கூர்ந்தாய்வு செய்யப்படும்.

**(உ) பள்ளித்தலைமையாசிரியர்கள் பணிகள்:**

1. ஒவ்வொரு பள்ளி தலைமையாசிரியர்களும் தங்கள் பள்ளியில் தேர்விற்கு வருகை புரியாத தேர்ச்சி பெறாத மாணவர்களின் விவரங்களை சேகரித்து வைக்கப்படவேண்டும்.
2. அனைத்து மாணவர்களையும் சிறப்பு பயிற்சி மையத்திற்கு வருகை புரிவதற்கு பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், வகுப்பு ஆசிரியர்கள், கல்வி தன்னார்வலர்கள் மூலம் மாணவர்களின் வீட்டிற்கு சென்று மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தேர்வு சார்ந்த விழிப்புணர்வு முக்கியத்துவத்தை வழங்கி பயிற்சி மையத்திற்கு வருகை புரிய செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
3. குறைந்த பட்ச கற்றல் கையேட்டினை பயன்படுத்தி பாட ஆசிரியர்கள் பாடம் நடத்துவதையும் வாராந்திர சிறு தேர்வு நடத்துவதையும் வகுப்பு ஆசிரியர்களுக்கு

www.Padasalai.Net

தெளிவாக விளக்கிக் கூறி இதற்காக பாடத்திட்ட கால அட்டவணை தயார்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும்.

4. மாணவர்கள் தொடர்ந்து பயிற்சி மையத்திற்கு வருகை புரிந்து, துணை தேர்வு எழுதி தேர்ச்சி பெறுவதற்கான நடவடிக்கைகளையும், தேர்ச்சி பெற்றபிறகு, மாணவரை அடுத்த வகுப்பினை தொடர்ந்து கற்பதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.
5. மாணவர்கள் வருகையினையும் வாராந்திர தேர்வு மதிப்பெண்களையும் கல்வி மேலாண்மை தகவல் மையம் (EMIS) தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்
6. பொதுத்தேர்வு எழுதாத மற்றும் தேர்ச்சி பெறாத அனைத்து மாணவர்களும் சிறப்பு பயிற்சி மையத்திற்கு வருகை புரிவதையும் பயிற்சி பெறுவதையும் ஊக்குவிக்கவேண்டும்.
7. மாணவர்கள் வருவதை தினந்தோறும் கண்காணித்துக் கொண்டே இருக்க வேண்டும். வருகை புரியாத போது அதற்கான காரணங்கள் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையானவற்றை தம்மால் இயன்றதை செய்து மறுநாள் வரவழைக்க வகுப்பு ஆசிரியர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.
8. மையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தருவது அவசியமாகும்.
9. பயிற்சியில் கலந்துக்கொண்ட மாணவர்களை துணைத்தேர்வு எழுத ஊக்குவித்து வழிகாட்டுதல் வேண்டும்.

| வ.எண் | முக்கிய செயல்பாடுகள் | பொறுப்பு அலுவலர் |
|---|---|---|
| 1 | ஆசிரியர்கள் தெரிவு, மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் அடிப்படைத் தேவைகள், சிறப்பு பயிற்சி மைய செயல்பாடுகள், துணைத்தேர்வு எழுத ஊக்குவித்து வழிகாட்டுதல் | பள்ளி தலைமையாசிரியர் |
| 2 | குறைந்த பட்ச கற்றல் கையேடு மற்றும் வினாத்தாள் தெரிவு | மாநில திட்ட இயக்ககம் |
| 3 | குறைந்த பட்ச கற்றல் கையேடு மற்றும் வினாத்தாள் நகல் எடுத்தல் மற்றும் (Hard Copy) பள்ளிகளுக்கு வழங்குதல் | மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) மற்றும் உதவித் திட்ட அலுவலர் (மாவட்டத் திட்ட அலுவலகம்) |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 4 | கற்றல் மையத்தின் வருகைப் பதிவு மற்றும் வாராந்திர தேர்விற்கான மதிப்பீடு | EMIS (மாநிலம் / மாவட்டம் ) |
| 5 | பார்வையிடுதல் | மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), உதவித் திட்ட அலுவலர் (மாவட்டத் திட்ட அலுவலகம்) மற்றும் வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் |
| 6 | பள்ளிகளில் நடைப்பெறும் பயிற்சிகளை அறிக்கையாக தயாரித்தல் | மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (OoSC) |

எனவே, அனைத்து மாவட்டங்களின் முதன்மைக் கல்வி அலுவலர்கள் மார்ச் 2024 ஆம் கல்வியாண்டில் 10ஆம் வகுப்பு அரசு பொது தேர்வில் தேர்ச்சி பெறாத மற்றும் வருகை புரியாத மாணவர்கள் அனைவரும் அரசு தேர்வுத் துறையின் வாயிலாக நடத்தப்படும் துணை தேர்விற்கு விண்ணப்பிக்க அறிவுறுத்தல் வேண்டும், அவ்வாறு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் "தொடர்ந்து கற்போம்" என்ற முன்னோடி திட்டத்தில் கலந்து கொண்டு பயனடையச் செய்யவும் மற்றும் அனைத்துமாவட்டக் கல்வி அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து நிலை கள அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கிடவும், இத்திட்டத்தின் செயல்பாடுகளுக்கு குறைந்த கால அளவு உள்ளதால், மேலும் சிறப்பாகஇத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம். தங்களது மாவட்டங்களில் எந்தவித புகாருக்கும் இடமளிக்காவண்ணம் விரைந்து சிறப்பாக செயல்படுத்தவும் மற்றும் அனைத்து நிகழ்வுகளையும் ஆவணப்படுத்தவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்
பள்ளிக் கல்வி இயக்ககம்

23/4/24
மாநில திட்ட இயக்குநர்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

பெறுநர்:

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்.